இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது.

# தொழிலாளர் பாதை

விலை 1.50

★ மாதமிரு இதழ் ★ இதழ் 382 ★ 1988 ஏப்ரல் 29 வெள்ளிக்கிழமை

**கீர்த்தி பாலசூரிய நினைவு கூட்டம்**

இடம்: ஹற்றன் - டிக்கோயா நகர சபை மண்டபம்

காலம்: 1988 மே 8 ஞாயிறு

நேரம்: கண்காட்சி: காலை 10 மணி

கூட்டம்: பி. ப. 2 மணி

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் / இளம் சோசலிஸ்டுகள்

# உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!

# அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் பாட்டாளி வர்க்கத்தை அணிதிரட்டு!

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மேதினச் செய்தி

**உலக பாட்டாளி வர்க்கம் 1988 மேதினத்தினை, காலங் கடந்த முதலாளித்துவத்தை தூக்கி வீசவும், உலக சோசலிசப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்லவும் அனைத்துலக வர்க்க தோழமை பதாகையை உயர்த்திய வண்ணம் தயார் செய்ய வேண்டிய தீர்க்கமான கட்டத்தில் கொண்டாடுகின்றது.**

இலங்கை — தமிழ் ஈழ தொழிலாள வர்க்கம் அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்துடன் இணைந்து முதலாளித்துவ வர்க்கத்தினை தூக்கி வீசி, இலங்கை — தமிழ் ஈழ ஐக்கிய சோசலிச குடியரசினை நிறுவப் போராட வேண்டிய கட்டத்தில் இம்முறை மேதினம் கொண்டாடப்படுகின்றது.

அனைத்து தொழிலாளர்களுக்கும் எமது வேண்டுகோள் இது தான்: இந்திய — இலங்கை உடன்படிக்கைக்கும், இந்தியப் படைகளின் வட — கிழ் மாகாண ஆக்கிரமிப்புக்கும், முதலாளித்துவ சுறீ லங்கா மக்கள் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து முதலாளித்துவ அமைப்பை பேணுவதற்கும் அடிபணியுமாறு சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ தலைவர்களும் யூ. என் பி. யுடன் கூட்டுச் சேர்ந்து உள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைமையும் விடுத்துள்ள அழைப்புக்களை அடியோடு நிராகரியுங்கள். முதலாளித்துவத்தை தூக்கி வீச உலக 'தொழிலாளர்களே ஒன்று படுங்கள்' என கார்ல் மார்க்ஸ் விடுதத அழைப்புடன் ஒன்றிணைந்து முதலாளித்துவத்தில் இருந்து சுயாதீனமாக புரட்சிக் கட்சியின் தலைமையின் கீழ் அணி திரளுங்கள்!

ஏகாதிபத்திய அமைப்பினுள் இலங்கை இந்தியா, போன்ற அரைக் காலனித்துவ நாடுகளின் முதலாளி வர்க்கமானது தொழிலாள வர்க்கத்துக்கும், ஏழை விவசாயிகளுக்கும், ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கும் இன்று பஞ்சம், பட்டினி போஷாக்கின்மை, படிப்பறிவின்மை, தொற்று நோய், தொழிலின்மை, இன — மத மோதுதல்கள், யுத்தம் போன்ற மிலேச்ச நிலைமையையே வழங்கக் கூடியதாக உள்ளது. இதனை இலங்கையில் ஜயவர்தன அரசாங்கமும், இந்தியாவில் காங்கிரஸ் அரசாங்கமும் கண் முன்னால் நிரூபித்துக் காட்டி உள்ளன. ஏகாதிபத்திய நெருக்கடியின் ஒவ்வொரு கட்டத்தின் போதும் இவை உககிரம் அடைகின்றன.

இந்நிலைமையில் 'தேசிய புனர் வாழ்வு' எனக் கூறிக் கொண்டு முதலாளித்துவ சிறீலங்கா மககள் சட்சியுடனான கூட்டுடன் இணைந்து கொள்ளும் படி சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ தலைவர்கள் விடுத்து உள்ள அழைப்பானது, மீட்சிக்கான தேசிய மார்க்கம் உள்ளது என தொழிலாள வர்க்கத்துக்கு காட்டும் மோசடி நடவடிக்கையாகும். இதன் மூலம் அவர்களை உலகப் பாட்டாளி வர்க்கத்தில் இருந்து வேறு படுத்தி முதலாளித்துவத்துக்குப் பலியிட முயல்கின்றது.

இரண்டு உலக யுத்தங்கள் மூலம் தொழிலாள வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் அளப்பரிய அழிவுகளுக்கு ஆட்படுத்தி, பலியிட்ட ஏகாதிபத்திய கொலைகாரர்கள் இன்று மீண்டும் ஒரு தடவை மூன்றும் உலக யுத்தத்தை உண்டு பண்ணும் வேலைத்திட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். இதற்குக் காரணம், உலக முதலாளிததுவம் தீர்வு காண முடியாத நெருக்கடியுள் மூழ்கிப் போயுள்ளதே. உலக முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் எவ்வளவு தூரம் ஆழமாகியுள்ளன என்பதை 1987 அக்டோபர் 19 ம் திகதி அமெரிக்க வோல் ஸ்ரீட் பங்கு முதல் சந்தையில வீழ்ச்சி சுட்டிக் காட்டியது. 1929 ம் ஆண்டின் வோல் ஸ்ரீட் வீழ்ச்சியின் பின்னர் உலகத்தை பற்றிப் பிடித்த பொருளாதார வீழ்ச்சியும், 1929 — 1944 ம் ஆண்டுகளில் உலக யுத்தத்தினை உண்டு பண்ணிய அல்லது அதையும் தாண்டும் விதத்தில் முதலாளித்துவ அமைப்பினுள் உக்கிரம் கண்டுள்ளது.

இலாபத்துக்கான சுரண்டலைக் கொண்ட இந்த முதலாளித்துவ அமைப்பினுள் உற்பத்தி சமூகமயமாககப்பட்டு உள்ள போதிலும் — அதாவது உற்பத்தி பக்டரி மட்டத்தில் மட்டுமல்ல, பிராந்திய மட்டத்தில் மட்டுமல்ல, அனைத்துலக ரீதியில் உழைப்பின் செயற்பாடு அவசியமாகி உள்ள போதிலும் உற்பத்தி சாதனங்களின் உட

★ 2 ம் பக்கம் பார்க்கவும்

## தோழர். கீர்த்தி பாலசூரியவின் நினைவு நீடுழி வாழ்க ரூ. 250,000 நினைவு நிதி



தோழர். கீர்த்தி பாலசூரியவின் நினைவாக ஆரம்பிக்கப்பட்ட இந்நினைவு நிதிக்கு மொத்தம் ரூபா 157,816 சேர்ந்துள்ளது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஏனைய தோழமை கிளைகளிடம் இருந்து கிடைத்த உதவியுடன் இந்நிதி ஏற்கனவே ரூபா 250,000/= இலக்கை தாண்டியுள்ளது. எனினும் எமது இந்த இலக்கினை அடைய உதவி செய்ய வாக்குறுதி அளித்த புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள், தொழிலாளர் பாதை', 'கம்கறு மாவதத' வாசகர்களை தமது உதவி நிதியை கையளிக்கும் படி தோழமையுடன் வேண்டுகின்றோம். இந்த உதவி நிதி புரட்சித் தலைமையை கட்டி எழுப்பும் போராட்டத்துக்கு பேருதவியாக அமையும்

உதவி நிதி அனுப்ப வேண்டிய முகவரி:

ஆனந்த வக்கும்புர,<br>
90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை,<br>
கொழும்பு — 10

## வடக்கு கிழக்கிலிருந்து இந்திய — இலங்கை இராணுவத்தை அகற்று!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!

[முன் பக்கத் தொடர்ச்சி]

மை தனியுடமை முதலாளிகளின் சொந்தத்திலேயே இன்னமும் இருந்து வருகின்றது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் எதிர்ப்புக்களை தவிர்த்துக் கொண்டு முதலாளித்துவ அமைப்பினை கொண்டு நடாத்தும் பொருட்டு அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் தலைமையில் பிரெட்டன் வூட்ஸ் உடன்படிக்கை கைச்சாத்தானது. இவை இன்று உக்கிரம் கண்ட வர்த்தகப் போராகியுள்ளது.

1940 ல் இறுதியில் பெரும் பலம் கொண்டதாக இருந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் இன்று உலகின் முக்கிய கடனாளி நாடாகி உள்ளது. அதன் வருடாந்த கடன்களு 16000 கோடி டாலர்களை தாண்டி உள்ளது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் உலகச் சந்தையில் நூற்றுக்கு 50 வீதத்தைப் பிடித்துக் கொண்டிருந்த அமெரிக்க முதலாளிகள் இன்று 23% யே கொண்டு உள்ளனர். 1945 ல் உலக மோட்டார் உற்பத்தியில் 80% ஐ உற்பத்தி செய்த டெட்ரொயிட் நகரம் 1980ல் 20% ஆக வீழ்ச்சி கண்டது.

அமெரிக்காவின் முக்கிய போட்டியாளனுக விளங்கும் ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள், அமெரிக்க வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறையின் பெரும் பகுதியை அடைக்கும் கடன் கொடுப்போராக மாறி உள்ளனர்.

அமெரிக்காவின் முக்கிய போட்டியாளனுக விளங்கும் இந்த ஜப்பான் முழுமனே வெளிநாட்டுச் சந்தைகளிலேயே தங்கியுள்ளது.

முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் உக்கிரம் அடைகின்றன எனக் கூறும் போது அது உற்பத்திச் சக்திகளும் அதன் ஓர் அங்கமான உழைப்பின் உரித்தாளனுன தொழிலாள வர்க்கமும் தனிச்சொத்துடமை, தேசிய அரசுகளைக் கொண்ட உற்பத்தி உறவுகளுடன் மூர்க்கமான விதத்தில் மோதிக் கொள்வதையே குறிக்கின்றது.

இந்த தனியார் முதலாளித்துவ சொத்துடமையையும் தேசிய அரச எல்லைகளையும் துடைத்துக் கட்டி உலகப் பொருளாதாரத்தை சோசலிச அடிப்படையில் ஒருங்கு திரட்டி மனித இனத்துக்கு எதிர்காலத்துக்கான பாதையைக் காட்டக் கூடிய ஒரே வர்க்கம் தொழிலாள வாககமே.

காலனித்துவ, அரைக் காலனித்துவ நாடுகளின் மக்களிற்கு எதிராக ஏற்கனவே ஏகாதிபத்தியவாதிகள் யுத்த மிரட்டல்களில் ஈடுபட்டுள்ளனர். நிகரகுவாவுக்கு எதிராக ஆக்கிரமிப்பு செய்ய மிரட்டி உள்ள றீகன் அரசாங்கம், ஈரானின் எண்ணெய் டாங்கிகளுக்கு குண்டு வீசியது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாகச் செயற்படும் சியோனிச இஸ்ரேல் ஆட்சியாளர்கள் பீ. எல். ஓ. பிரதிதவர் அபு ஜிஹாத்தை படுகொலை செய்தனர். வட — கிழக்கு மாகாணங்களில் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தினை நசுக்க இந்திய இராணுவத்தை அனுப்ப காந்தி அரசாங்கம் செயற்பட்டதற்குக் காரணம் இந்த ஏகாதிபத்திய எதிர்ப்புரட்சி தேவைகளே.

'தனிநாட்டில் சோசலிசம்' என்ற கோட்பாட்டின் கீழ் ரூஷ்யப் புரட்சியை தனிமைப்படுத்தவும், ஏகாதிபத்தியத்துடன் சகவாழ்வு நடாத்தவும், அதன் பேரில் உலகப் புரட்சியை நாசமாக்கவும் முன்னணியில் நின்ற ஸ்டாலினிச அதிகாரத்துவம், இன்று மீண்டும் அந்த எதிர்ப்புரட்சி உரிமைக்காரர்களாக 'ரெகோட்' வைத்துள்ளது.

ரூஷ்யாவினுள் முதலாளித்துவத்தை புனருத்தாரணம் செய்வதற்கு வழி வகுக்கும் 'பெரொஸ்டுசாயிகா' 'க்ளாஸ்னொட்' என்ற பிற்போக்கு வேலைத்திட்டங்கள் கொர்பச்சோவ் நிர்வாகத்தால் அமுல் செய்யப்பட்டு வருகின்றன. அத்தோடு பாலஸ்தீனம், ஆப்கானிஸ்தான், தமிழ் ஈழம், நிகாகுவா முதலான நாடுகளினை ஏகாதிபத்திய ஆட்சியாளர்களுக்கு விற்றுத் தள்ளும் கொடுக்கல் வாங்கல்களில் கொர்பச்சோவ் நிர்வாகம் களத்தில் இறங்கியுள்ளது.

சோவியத் ரூஷ்யா, உட்பட சீர்குலைந்த தொழிலாளர் அரசுகளில் தொழிலாளர்கள் அதிகாரத்துவங்களின் வலதுசாரி போககுகளுக்கு எதிராக மோதிக் கொண்டுள்ளதை ஹங்கேரி, போலாந்து ஆகிய நாடுகளில் கடந்த சில தினங்களில் இடம் பெற்ற போராட்டங்கள் மட்டுமன்றி, ரூஷ்சியாவின் ஆர்மேனியா பகுதியில் தொழிலாளர்களை முன்னணியில் கொண்ட தேசிய சமத்துவத்துக்கான போராட்டங்களும் சுட்டிக் காட்டுகின்றன.

உலக தொழிலாள வர்க்கத்தின் முன்னிலையில் சோசலிசப் புரட்சிக்காகவும், சீர்குலைந்த தொழிலாளர் அரசுகளில் அரசியல் புரட்சிக்காகவும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு மட்டுமே முன்நோக்கினையும் வேலைத்திட்டத்தையும் முன் வைத்துள்ளது. உலகச் சோசலிசப் புரட்சிக்கான வரலாற்று தேவைகளை பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதக் கட்சியினுல் மட்டுமே இட்டு நிரப்ப முடியும். ஏகாதிபத்தியமும், சோவித் அதிகாரத்துவமும் உக்கிரமான நெருக்கடிக்குள்ளாகி உள்ள இந்நிலைமையில், பாட்டாளி வர்க்கம் சோசலிசப் புரட்சிக்கு அணிதிரள தலைமை வழங்கக் கூடிய நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவை குலைத்து விட பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஓடுகாலிகள் தொழிற்பட்டனர். இத்துரோகத் தலைமைகளை துரத்தி அடித்து பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தினை அச்சாணியாகக் கொண்டு பாட்டாளி வர்க்கத்துக்கு தலைமை வழங்க அது போராடி வருகின்றது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அதன் இலங்கைக் கிளையாகும்.

இந்நிலைமையில் இந்திய — இலங்கை உடன்படிக்கையின் கீழ் தாம் இந்திய அகதி முகாம்களுக்கு தள்ளப்படுவதையும், இனவாத ஆத்திரமூட்டல்கள் மூலம் தாம் கைது செய்யப்படுவதையும் எதிர்த்து தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சாரம் வெடித்துள்ளது. ஏகாதிபத்திய வங்கிகளினுல் ஒழுங்கு செய்யப்பட்ட உனியார் மயமாக்கத்தை எதிர்த்து போராடும் அவசியத்தை தொலைத்தொடர்பு திணைக்கள ஊழியர்கள் சுட்டிக் காட்டி உள்ளனர். இலவசக் கல்வி வெட்டு வாழ்க்கைத் தரம் அழிப்புக்கு எதிரான பிரச்சாரத்தை டாக்டர்களுடன் இணைந்து தாதிகள் ஆரம்பித்துள்ளனர். இவை சோசலிசப் புரட்சி பற்றிய பிரச்சினையை தோற்றுவித்துள்ளன.

சோவியத் சபைகளை அடிபபடையாகக் கொண்ட இலங்கை — தமிழீழ ஐக்கிய சோசலிச குடியரசுக்காக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் போராடுகின்றது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இணையும் படி சகல தொழிலாளர்களையும், இளைஞர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் நாம் இந்த மேதினத்தில் வேண்டுகின்ருேம்.

★ இந்திய — இலங்கை படைகளை வடக்கு — கிழக்கில் இருந்து வெளியேற்று! தமிழ தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை உறுதி செய்!

★ சோசலிச வேலைத்திட்டத்துக்காகப் போராடு!

★ யூ. என். பி. அரசாங்கத்தை வெளியேற்றி தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்துக்காகப் போராடு!

★ உலக சோசலிசப் புரட்சியை நோக்கி முன்னேறு!

★ நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவை கட்டி எழுப்பு! புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்!

## தோட்டத் தொழிலாளர்களின் . .

★ 8-ம் பக்கத் தொடர்ச்சி

ங்கை உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டதன் மூலம் தொண்டமானின் காட்டிக் கொடுப்புக்கும், இந்திய — இலங்கை ஆட்சியாளர்களின் தாக்குதல்களுக்கும் சகாக்களாகியுள்ளனர்.

இ. தொ. கா. தலைவர்களும சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ தலைவர்களும் இழைத்து வரும் கேவலமான காட்டிக் கொடுப்புக்களின் மத்தியில் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும், குடியுரிமைக்காக போராடவும் திடசங்கற்பம் பூண்டுள்ள தோட்டத் தொழிலாளர்களை நகர்ப்புறத் தொழிலாள வர்க்கத்துடனும் இந்தியத் தொழிலாள வர்க்கத்துடனும் ஐக்கியப்படும் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராடுமாறு வேண்டுகின்ருேம். நகர்ப்புறத் தொழிலாள வர்க்கம் தமது ஐக்கியத்தை கட்டி எழுப்புவதன் மூலம் இலங்கையிலும் இந்தியாவிலும் முதலாளி வர்க்க எதிரிகளும், அவர்களின் அரசாங்கமும், அவர்களின் ஏஜன்டுகளும் தொழிலாள வர்க்கத்தை பிளவு படுத்தி, தாக்கச் செய்யும் நடவடிக்கைகளை தோற்கடிக்க முன்வர வேண்டுமென நாம் வேண்டுகின்ருேம்.

(1) தமிழ் விடுதலைப் போராட்டத்தை தோற்கடிக்கவும் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை தாக்கவும், முதலாளித்துவ ஆட்சியை காக்கவும் திணிக்கப்பட்டுள்ள இந்திய — இலங்கை உடன்ப்டிக்கையையும், வட — கீழ் மாகாணங்களில் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பை தோற்கடிக்கவும்.

(2) முதலாளித்துவ ஒடுக்குமுறையை கட்டவிழ்க்க திணிக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் கைது, தொழிற்சங்க எதிர்ப்பு நடவடிக்கைகளை நிறுத்தவும்.

(3) ஏகாதிபத்திய வங்கியாளர்களும், பன்னுட்டு கம்பனிகளும முதலாளித்துவ கம்பனிகளுடன் கூட்டாகச் செய்யும் தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம், தோட்டங்களை தனியாரிடம் ஒப்படைத்தல், ஊழியர் எண்ணிக்கை குறைப்பு, வாழ்க்கைத் தரம் வெட்டு

ஆகியவற்றை எதிர்த்து பக்டரிகளுள் உள்ளமர்வு போராட்டம், பொது வேலை நிறுத்தம ஆகியவற்றுக்கு தயாரா செய்யவும் யூ. என். பி. அரசாங்கத்தை வெளியேற்றி சோசலிச வலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்துக்கு போராடவும் இந்தத் தொழிற்சங்க மகாநாட்டில் முடிவு செய்ய வேண்டும்.

இந்த விதத்தில் தலைவர்களை இ. தொ. கா. தலைவர் சந்திரசேகரன் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக நடாத்தும் 'எதிர்ப்பு' இயக்கம் யூ. என். பி அரசாங்கத்தில் இருந்து இ. தொ. கா. தலைமையை வெளியேற்றும் படி நெருக்குதல் பிற்போக்கு இந்திய — இலங்கை உடன்படிக்கையை தோற்கடித்தல், இந்திய ஆக்கிரமிப்பு படைகளை வெளியேற்றுதல் சம்பந்தமான பிரச்சினைகளை தவிர்க்கும் நிலையில் அது இ. தொ. கா. தலைமையின் துரோகத்தை தோற்கடிப்பதற்கான நிச நிலைமைகள் தோட்டத் தொழிலாளர்களிடையே வளர்ச்சி காண்பதை தவிர்ப்பதாக முடியும். இந்நிலையில் அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் போராட்டம் முதலாளித்துவ அரச இயந்திரத்தை சிதறடிக்கும் போராட்டத்துடன் இணைந்துள்ளது என்பதை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சுட்டிக் காட்டுகின்றது

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இந்திய, இலங்கை கிளைகளான சோசலிசத் தொழிலாளர் கழகம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இணைந்து அவற்றை உலக சோசலிசப் புரட்சியின் கட்சிகளாக கட்டி எழுப்பவும் 'தொழிலாளர் பாதை' வாசகர்களாகவும் முன்வரும் படி நாம் சகலரையும் வேண்டுகின்ருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர். கீர்த்தி பாலசூரியவின் நினைவு நீடூழி வாழ்க!

## நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கை கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மத்திய குழுவின் அறிக்கை

## 1988 — 2 — 27

### சென்ற வார இதழின் தொடர்ச்சி

வட்டமேசை பேச்சுவார்த்தை தமிழ் மக்களை மீண்டும் ஒரு முறை நசுக்கும் இரத்தக் களரிப் பொறி எனக் குறிப்பிட்ட தோழர். கீர்த்தி பாலசூரிய விடுதலைப் போராட்டம் பற்றிய அடிப்படை கொள்கைப் பிரச்சினையை எழுப்பினார்.

''யாழ்ப்பாணத்தில் ஏப்ரல் சம்பவமானது வடக்கு தேசிய விடுதலைப் போராட்டத்தை தீர்க்கமான இடத்திற்கு கொண்டு வந்து உள்ளது. யூ. என். பி. அரசாங்கம் இராணுவ அடக்கு முறையை கொண்டு வருவது வடக்கு மக்களில் அநேகர் பேச்சுவார்த்தை ரீதியிலான தீர்வொன்றை எதிர்ப்பார்த்திருக்கும் போதே என்பதால் இது தொடர்பான நிலைமைகளை சிருஷ்டிக்க வேண்டும் என்ற பொய் காரணத்தை எடுத்துக் காட்டியே.''

தமிழ் விடுதலை கூட்டணி தலைமைகள் இந்த பாரியபுளுகிற்கு நம்பிக்கையை பெற்று கொள்ளும் வகையில் செயலாற்றுகின்றனர்.

1947 ல் இருந்து சிங்கள முதலாளித்துவ வர்க்கத்திடம் எதிர்பார்ப்பு வைத்திருந்த தமிழ் முதலாளிகள் தற்போது இந்திய முதலாளிகள் தமக்கு உதவி செய்வார் என காத்திருக்கின்றனர்.

''இந்திய அரசாங்கம் பொருளாதார நெருக்கடியின் பின் தேசிய விடுதலையாலும் வர்க்கப் போராட்டத்தாலும் தாக்கப்பட்டு வருகின்றது. அது ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களது உதவிக்கு வராது.''

''...... சந்தர்ப்பம் கிட்டின் (தென்னிந்திய முதலாளிகள்) தமிழ் விடுதலைப் போராட்டத்தை தமிழ் சிங்கள யுத்தமாக மாற்றி விட தருணம் பார்ப்பர். சிங்கள முதலாளித்துவ வர்க்கத்தின் சலுகைகளுக்கு மேலாக தமிழ் முதலாளித்துவ வர்க்கத்தின் சலுகை பெறும் நிலையை நிறுவுவதே அதன் நோக்கமாகும்.''

(நான்காம் அகில சஞ்சிகை 1987 — மார்ச்)

இவ்வறிக்கை தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ''நியூஸ் லைன்'' பத்திரிகையில் பிரசுரமாகையில், மேற்குறிப்பிட்ட பந்தி உட்பட்ட அவ்வறிக்கையின் தமிழ் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ காட்டிக் கொடுப்பு நடவடிக்கையை விமர்சித்த சகல பகுதிகளையும் வெட்டி விட துஷ்டர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

1984 மே 18 ம் திகதி 'தொழிலாளர் பாதை' பதிப்பாளர் தோழர். ஆனந்த வக்கும்புற கைது செய்யப்பட்டு 14 நாட்கள் அவசரகால சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டார். தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு சார்பாக பிரச்சாரம் செய்வதை தடை செய்த அரசியல் சட்ட ஆறுவது திருத்தச் சட்டத்தை மீறியது எனக் குற்றம் சாட்டப்பட்ட அவரை பேணுவது பற்றி, துஷ்டரால் இங்ஙனம் அணிக்கை செய்யப்பட்ட அறிக்கை போன்றவை தமிழ் விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்காக தொழிலாள வர்க்கம் அனைத்துலக ரீதியில் அணி திரட்ட வேண்டிய தேவையை அது எடுத்துக் காட்டியது.

''இப்போராட்டத்தில் தீர்க்கமானதும் தடுக்கப் படமுடியாததுமான காரணமாக முதலாளித்துவ கட்சியுடனும் அரசுடனும் இந்த (சமசமாஜ — ஸ்டாலினிச) தலைமைகள் நடத்தி வரும் பிற்போக்கு கூட்டினை தகர்க்க தொழிலாள வர்க்கத்தை அணி திரட்ட வேண்டியுள்ளது. கால தாமதம் செய்ய நரமில்லை. ல. ச. ச. கட்சி — கம்யூனிஸ்ட் கட்சி இ. தொ. கா. தலைமைகள் அரசாங்கத்துடனும் முதலாளித்துவ, கட்சிகளுடனான சகல தொடர்புகளையும் அறுத்து தொழிலாள வர்க்கத்தின் சகல பிரிவினதும் தேசிய பிரதிநிதிகள் மகாநாட்டை கூட்டுமாறு நாம் தொழிலாள வர்க்கத்தின் சகல பிரிவினரையும் வேண்டுகின்றோம்.''

''அத்தகைய சம்மேளனம் ஒன்றுள் வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றவும், தமிழ் மக்களின் தேசிய உரிமைகளை நிலைநாட்டுவதற்கு ஆறுவது அரசியல் திருத்தச் சட்டத்தை நீக்க கோரியும்



1948 — 1987

— சோசலிச கொள்கையை சமர்ப்பிக்க இத்தலைமைகளை நிர்ப்பந்திக்க வேண்டும்.

''தொழிலாள வர்க்கத்தின் சுயாதீன செயல்களூடாக யூ. என். பி. யின் இனவாத சர்வாதிகாரத்தை தோற்கடிக்கவும் தொழிலாள வர்க்கத்தை புரட்சிகர செயற்திட்டத்தின் கீழ் அணிதிரட்டவும் நிலைமைகளை தயாரிப்பதற்கு இந்த போராட்டம் அத்தியாவசியமாகும் சீர்த்திருத்தவாத தலைமைக்களை தொழிலாளரதும் விவசாயிகளதும் அரசாங்கத்திற்காக போராடும் புரட்சிகர தலைமையின் ஊடாக பதிவீடு செய்வது இவ்வகையில் மட்டுமே சாத்தியமாகும்''.

(1986 ஜூன் வேர்க்கஸ் நியூஸ் — அவுஸ்திரேலியா)

இச்சமயத்தில் பிரித்தானிய தொ. பு. கட்சி தலைமையின் சீர்குலைவுக்கு எதிராக வேர்க்கஸ் லீக்கினுல் தொடுக்கப்பட்ட சவாலினுல் (1982 ல் ஹீலியின் தத்துவம் எனப்பட்டதும் 1984 ல் தொழிலாளர் புரட்சி கட்சியால் நிரந்தரப் புரட்சி கோட்பாட்டை திரிபு படுத்துவதற்கும் வேர்க்கஸ் லீக்கின் தோழர் டேவிட் நோர்த் சவால் விடுத்தார்: பரப்பரப்படைந்த ஓடுகாலிகள் வேர்க்கஸ் லீக்கானது தொழிலாள வர்க்க வர்க்க சுயாதீனத்திற்காக காட்டிய பலத்த அக்கறை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தால் கடைப்பிடிக்கப் படுவதாக கூறி தமது அனைத்துலகவாத விரோத நடவடிக்கையை நிரப்படுத்தினர். 1985 ல் — இருந்து காலதாமதப்படுத்தப்பட்ட அனைத்துலக குழுவின் 10 வது மகாநாடு 1985 ல் இச்சூழ் நிலைகளின் மத்தியில் கூட்டப்பட்டது.

இம்மகாநாட்டிற்கு தோழர். கீர்த்தியினுல் எழுதப்பட்டு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மத்திய குழுவின் பூரண அனுமதியுடன் சமர்ப்பிக்கப்பட்ட முன் நோக்கு கட்டுரை ஓடுகாலிகளால் எத்துணை எதிர்ப்புக்கு இலக்காகியதோடு, அவர்கள் அக்கட்டுரையின் முக்கிய பிரிவுகளை உலக கிளைகளுக்கு மறைத்து விட்டனர். தோழர். கீர்த்தி பாலசூரியவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மறு பிரதிநிதியும் மகாநாட்டில் உரையாற்றுவதை தடுக்கும் பொருட்டு, முன்னர் குறிப்பிட்ட தர்மவிமல ரணசிங்கவின் கடிதம் ஒன்று பண்டாவினுல் சமர்ப்பிக்கப்பட்டது. ''பெருக்கமடையாத'' குற்றச்சாட்டின் பேரில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை அனைத்துலக குழுவில் இருந்து நீக்கி விடும் தீர்மானத்தை கொண்டிருப்பினும் இது நடைமுறைப்படுத்தப்பட வில்லை.

அவர்களால் அவமானப்படுத்தப்பட்டு மறைத்து வைக்கப்பட்ட முன்நோக்கு கட்டுரையானது நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் கீழ் இலங்கையிலும் இந்திய உபகண்டத்திலும் தொழிலாள வர்க்கத்தை ஏனைய ஒடுக்கப்படும் மக்களது தலைமைத்துவமாக நிறுவி விடும் போராட்டத்தை கருவாக கொண்டு அமைந்து இருந்தது. அதில் இலங்கை தொழி[illegible] வர்க்கத்தின் பணி[illegible] தமிழ் விடுதலைப் போராட்டத்திற்கான பாதையும் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

''தொழிலாள வர்க்கம் சோசலிச புரட்சியின் பொறுப்புக்களை நோக்கி எழுச்சியுறுவது, இக்கொடிய திரிவுவாத அச்சுறுத்தலை தொழிலாள வர்க்கத்துள் ஒழித்து

★ 4 ம் பக்கம் பார்க்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர். கீர்த்தி பாலசூரியவின் நினைவு நீடுழி

கட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நடத்தும் போராட்டத்தின் ஊடாக மட்டுமே யாம். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கிளையாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நடத்தி வரும் இப் போராட்டம் மட்டுமே வடக்கின் தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் — தொழிலாள வர்க்கத்தினதும், இந்திய தொழிலாள வர்க்கத்தினதும் முதலாளித்துவத்தை புரட்டியடிக்க வல்ல ஒரேயொரு அடிப்படையான அனைத்துலக அடிப்படையினை அடித்தளமாக கொண்டிருக்கின்றது.

இதன் மூலம் பலத்த சக்தியை பெற்று சோசலிச புரட்சியின் உலக கட்சிக்குள் தொழிலாள வர்க்கத்தின் முன்னேறிய பிரிவுகளை ஒருங்கிணைத்த படி தேசியவாத பிடியில் இருந்து விடுபட்டு உலகம் முழுதும் தமது விடுதலைக்கான எழுச்சியுற முடியும்.

''ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தில் தாம் விரும்பிய வழி முறையை தேர்ந்தெடுக்க தமிழ் விடுதலைப் போராட்டத்திற்குள்ள உரிமை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தால் பேணப்படும் அதே சமயம் நாம் தமிழ் தேசியத்தின் முதலாளித்துவ வர்க்கத்தாலும் தமிழர் விடுதலை கூட்டணியாலும் கடைப்பிடிக்கப்படும் கொடிய கொள்கைகளினுல் விளையும் அனர்த்தம் பற்றி தமிழ் இனத்தினை எச்சரிக்கை செய்கின்ருேம்.

''ஐக்கிய தேசிய கட்சி பிரித்தானிய ஏகாதிபத்தியத்துடன் 1947 ல் தமிழ் தேசியத்தின் உரிமைகளை நசுக்கி விட இணைந்த இத் தமிழ் முதலாளித்துவ கட்சி இன்று ''பிரதேச சுயாட்சி'' என்ற கூட்டிற்காக தமிழ் தேசியத்தின் போராட்டத்தை ஏப்பம் விடவும் அதன் ஊடாக தமது சலுகைகளில் சிலவற்றை பேணிக் கொள்ளவும் பேராசையுடன் தயாராயுள்ளது. இதன் பொருட்டாகவே அவர்கள் வட்டமேசையில் முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளன. இக்காட்டிக் கொடுப்பிற்கு எதிராக தமிழ் தேசியத்தின் மிகவும் ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவுகள் தமது விடுதலைப் போராட்டத்தை உக்கிரமாக்கி உள்ள போது தமிழ் முதலாளிகள் தேசிய விடுதலை இயக்கத்திற்கு சுயமாக தீர்மானம் எடுக்கவுள்ள உரிமையை பறித்து விட இந்திய முதலாளித்துவ வர்க்கத்துடன் சதியில் ஈடுபட்டுள்ளன.

இப்போது இருந்தே இந்திய தமிழ் நாட்டு அரசாங்கங்கள் உபகண்டத்தில் முதலாளித்துவ வர்க்கத்தின் கட்டுப்பாட்டிற்கு வெளியே செல்லாதவாறு விடுதலைப் போராட்டத்திற்கு இந்த அழுத்தத்தை பயன்படுத்தி உள்ளன.

''விடுதலைப் போராட்டத்திற்கு, இந்திய அரசாங்கத்திடமோ வேறு எந்த வழியிலேயோ எந்த உதவியை யாவது பெற உள்ள உரிமையை நாம் பேணுவோம். எனினும் இந்திய முதலாளித்துவ வர்க்கம் தமிழ் இனத்திற்கு மீட்சியை வழங்கும் என்ற சகல கருத்துக்களும் வெறும் நப்பாசைகளே என நாம் கூறுவோமாக. இது போன்றவை ஸ்டாலினிஸ்டுக்களால் விடுதலை போராட்டத்துள் புகுத்தப்பட்ட கருத்துகளாகும். இந்திய முதலாளித்துவ வர்க்கத்திடம் விடுதலைப் போராட்டத்தை கீழ்ப்படுத்தி விடச் செய்யும் முயற்சிகளுக்கு எதிராகவுள்ள எந்த ஒரு நபரும் இந்திய தொழிலாள வர்க்கத்தின் பால் திருப்ப வேண்டியுள்ளதாக கூறுவோம். இதற்காக மற்ற யாவற்றிற்கும் மேலாக தேவைப்படுவது, நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டினை அடித்தளமாக கொண்ட புரட்சி கட்சிக்கான போராட்டம் ஒன்ருகும். இத்தகைய போராட்டமானது எவற்றிற்கும் மேலாக முதலாளித்துவ விலங்குகளால் தொழிலாள வர்க்கத்தை சிறைப் பிடிக்க செயற்படும் ஸ்டாலினிசத்திற்கு எதிரான போராட்டமாக விளங்குகின்றது. இது போன்றவை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கைங்காரியம் ஆகும். இவ்வகையில் அமைந்த விடுதலைப் போராட்டத்தை முன் எடுத்துச் செல்லவும் தமிழ் தொழிலாளர் விவசாயிகளை முற்ருக விடுதலை செய்யும் வரை அதனை முன்னெடுத்து செல்லவும் இந்தியா பூராவும் இணைந்து கொண்ட நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கிளைகளை கட்டியெழுப்புவதுடன் தொடர்பு உள்ளதாகும், தமிழ் விடுதலைப் போராட்ட போராளிகளிடம் சமர்ப்பிக்க உள்ள ஒரே ஒரு வழியாக சோசலிசப் புரட்சியின் உலக கட்சியை கட்டி எழுப்ப இப் போராட்டத்தை ஒருங்கிணைப்பது உள்ளது. சிங்கள — தமிழ் தொழிலாளர் இடையே இந்த புரட்சிகர தலைமைத்துவத்தை கட்டி எழுப்புவதன் ஊடாக மட்டும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தலாம்.

இந்திய முதலாளித்துவம் 1947 ன் சுதந்திரம் எனப்பட்டதில் இருந்து நடத்திய செயற்திட்டத்தை விபரித்த அக்கட்டுரை இந்திய தொழிலாள வர்க்கத்திற்கு இங்ஙனம் குறிப்பிட்டது:

''இப்பிரச்சினை பல்வேறு அரசுகளால் போடப்படும் ஓட்டுக்களினுல் தீர்க்கப்படுபவை அல்ல. தொழிலாள வர்க்கம் நிலத்தை பொதுவுடைமையாக்கி மீண்டும் பகிர்ந்து கொடுத்தல், உரம் ட்ராக்டர் போன்றவற்றை உற்பத்தி செய்யும் கைத்தொழிலை தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ் தேசியமயமாக்கி அவற்றை பயன்படுத்த விவசாயிகளுக்கு சந்தாப்பம் வழங்குவதற்கு பெரிய கைத்தொழில்களை வங்கிகளை தேசியமயமாக்கல் தேசிய சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தலும் மத சார்பான குழுவினரது ஜனநாயக உரிமைகளை நிறைவேற்றல் உள்ளடங்கலான பூரண செயற்திட்டத்தை சூழ தொழிலாள வர்க்கத்தை அணி திரட்டல் அவசியமாகும்:

''சகல பல்வேறுபட்ட போராட்டங்களையும் முதலாளித்துவத்தை புரட்டியடிப்பதன் பொருட்டான பாரிய சக்தியாக இணைந்த படி உயிரூட்டுவதும், அவற்றை பிராந்திய ரீதியில் சீர்குலைவதை தவிர்க்கவும் புரட்சிகர கட்சியின் கீழ் செய்யப்படும் அத்தகைய அணி திரட்டலினுல் மட்டுமே முடியும்.

''இந்தியா எங்கும் தற்போது வெடித்து எழுந்து உள்ள சிறு தேசியங்களினதும் விவசாயிகளது சகல போராட்டங்களின் முன்னணியில் தொழிலாள வர்க்கத்தை நிறுவும் பொருட்டு தொழிலாள வர்க்க இயக்கத்துள் உள்ள பிரதான எதிர்ப்புரட்சிகர சக்தியான ஸ்டாலினிசத்தை அரசியல் ரீதியில் தோற்கடித்து நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினை கட்டி எழுப்புதல் அத்தியாவசியமாகும்.

★ ★ ★

1968 ல் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை நிறுவி ட்ரொட்ஸ்கிச தலைமைத்துவத்தை நிலைநாட்டும் பொருட்டான போராட்டத்தில் ஈடுபட்ட காலகட்டமானது இந்திய — உபகண்டத்தில் வர்க்கப் போராட்டத்தின் புதியதோர் காலகட்டமாகும். உபகண்டத்தின் உலக மகா யுத்தத்திற்கு பிற்பட்ட ஏகாதிபத்திய இணக்கத்தை பேணவும் ஓர் நடவடிக்கையாக சிறீலங்காவின் முதலாளித்துவ ஆட்சியை பேண ட்ரொட்ஸ்கிஸ்டுகளாக முகமூடியிட்டு இருந்த இலங்கை சமசமாஜ கட்சியின் துரோக தலைமைகளை சேர்த்து கொள்ளும் தீர்மானத்தை எடுக்க 1964ல் ஏகாதிபத்தியத்திற்கு நேர்ந்தது.

இக்கால கட்டத்தில் தொழிலாள வர்க்கத்திடம் கிளம்பும் புரட்சிகர வர்க்க போராட்டம் விவசாய மக்கள் உள்ளடங்கலான குட்டி முதலாளித்துவ போராட்டம் கிளர்ச்சி ஒடுக்கப்பட்ட தமிழ் தேசியத்தின் விடுதலைப் போராட்டம் வெடித்து எழுந்ததும் அதற்கு எதிராக அரைகுறை சட்ட ரீதியிலும் அரச அடக்கு முறை, அரசியல் வேட்டை, தொழிலாளர் அமைப்புக்களை ஒடுக்குதல், தமிழ் விரோத இனவாத யுத்தம் என்பனவும் தற்போது இந்தியப் படை வடக்கு — கிழக்கில் குந்தியிருப்பதன் ஊடாகவும் வெளிப்படுத்தப்பட்டு உள்ளது. இதன் பகிரங்கமான இலக்கு தொழிலாள வர்க்கத்தை தோற்கடித்து இராணுவ சர்வாதிகார ஆட்சியை திணிப்பது ஆகும்.

மக்கள் விடுதலை முன்னணியின் 1971 ல் ஏப்ரல் கிளர்ச்சி ஆரம்பமானதுடன் கூட்டரசாங்கம் கட்டவிழ்த்த அடக்கு முறையும் சங்காரமும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மீதும் பாய்ந்தது மக்கள் விடுதலை முன்னணி அரசியலை அம்பலமாக்குவதற்காக பாரிய அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் அவ்வமைப்பை அரச அடக்கு முறையில் இருந்தும் பேண புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள வர்க்கத்துள் பிரச்சாரம் செய்தது ஏப்ரல் ஒடுக்குமுறை ஆரம்பமாகையில் மக்கள் விடுதலை முன்னணியின் பத்திரிகைகளுடன் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் சகல பத்திரிகைகளும் கூட்டரசாங்கத்தினுல் தடை செய்யப்பட்டது கழகத்தின் முக்கிய காரியாலயம் பொலிஸ் ஆக்கிரமிப்புக்கு இலக்கானதுடன் தோழர். ஸ்பைக் (வில்பிரட் பெரேரா) பொலிஸ் இடையூறுகளுக்கு ஆளாகினுர். கழகதின் ஏனைய தலைமைகளும் மறைந்திருந்து தொழிற்பட நேர்ந்தது

மேமாத ஆரம்பத்தில் பொலிஸ் தொடுத்த ஆத்திரமூட்டல் சம்பவத்தின் மேல் கழக தோழர்களுக்கு எதிரான வழக்கில் தோழர்கள் கீர்த்தி பாலசூரியவும் சிசிர ஜயசூரியவும் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட ஸ்பைக் தோழர் இரண்டு தினங்களாக இரகசிய பொலிசாரது விசாரணையை எதிர் நோக்கினுர். மே மாதத்தில் கழகத்தின் முக்கிய அங்கத்தவரான லக்ஸ்மன் வீரசே...

குணதாச எ...

ர்கள் பொல...

செய்யப்பட்ட...

ஆரம்பத்தி...

தலை முன்ன...

லுக்கு அனு...

அதற்கு து...

கிய லங்கா...

கட்சி (இட...

திருத்தவாதிக...

குட்டி முதல...

ர்ச்சியின் தே...

அரச அடக்...

மத்தியதர வ...

ட்ட பரந்த பி...

படுத்தினர்.

னிஸ்ட் கழக...

பட்ட இந்த...

கீழ் கழகத்...

துவ பிரிவு...

லான வர்க்...

றது'' என்ற...

ப்பாட்டிற்கு...

தோழர். கீ...

வின் தலைமை...

டுக்கப்பட்ட...

ராட்டத்திலு...



கடந்த வருட பு...

தம் தோற்...

கழகத்தின்...

முக்கியமான...

கியது.

இளைஞர்...

நீட்டப்பட்ட...

க்கு முறை...

வர்க்கத்துள்...

கூட்டரசாங்...

சமசமாஜ...

கட்சிகளும்...

புரட்சிக் க...

அங்கத்தவ...

டும் இயக்க...

தன. கூட்...

ர்க்கவும் ...

த்தை முதல...

இருந்தும் ...

வும புரட்...


## ''தொழிலாளர் பாதை''
### சந்தாதாரர் ஆகுங்கள்!

அஞ்சல் கட்டணம் உட்பட
''தொழிலாளர் பாதை'' சந்தா விபரம்:

1 மாதம் — ரூ. 4.00 3 மாதம் — ரூ. 12.00
6 மாதம் — ரூ. 24.00 1 வருடம் — ரூ. 48.00

பெயர் :....................................................

முகவரி :....................................................

சந்தாக் காலம் :................ ரூ: ......... சதம் ......

சந்தாப் பணத்திற்காகிய அஞ்சல் அல்லது காசுக் கட்டளையுடன் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

நிர்வாகி,

''தொழிலாளர் பாதை''
இல. 90, 1 - வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீடுழி வாழ்க!

## 3 ம் பக்கத் தொடர்ச்சி



...த வருட பு. க. க. மேதின ஊர்வலம

மன் வீரகோன், எல். ஜீ. குணதாச என்னும் தோழர்கள் பொலிசாரால் கொலை செய்யப்பட்டனர்.

ஆரம்பத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியலுக்கு அனுசரித்து போய், அதற்கு தூண்டுதல் வழங்கிய லங்கா சமசமாஜக் கட்சி (இடது) போன்ற திருத்தவாதிகள் தற்போது குட்டி முதலாளித்துவ கிளர்ச்சியின் தோல்வியையும் அரச அடக்கு முறையினால் மத்தியதர வர்க்கத்துள் ஏற்பட்ட பரந்த பீதியையும் வெளிப்படுத்தினர். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துள் புகுத்தப்பட்ட இந்த நிர்ப்பந்தத்தின் கீழ் கழகத்தின் தலைமைத்துவ பிரிவு ஒன்று ''தொழிலாள வர்க்கம் தோல்வியுற்றது'' என்ற ஐயவாத நிலைப்பாட்டிற்கு பாய்ந்தது. தோழர். கீர்த்தி பாலசூரியவின் தலைமையின் கீழ் தொடுக்கப்பட்ட அரசியல் போராட்டத்தினால் இந்நிர்ப்பந்தம் தோற்கடிக்கப்பட்டமை கழகத்தின் வரலாற்றில் மிக முக்கியமான திருப்புமையமாகியது.

இளைஞர் கொலைகளிற்காக நீட்டப்பட்ட அரசியல் அடக்கு முறையை தொழிலாள வர்க்கத்துள் கொண்டுவர கூட்டரசாங்கம் இலங்கை சமசமாஜ கம்யூனிஸ்ட் கட்சிகளதும் உதவியோடு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவரை வேட்டையாடும் இயக்கத்தை ஆரம்பித்தன. கூட்டரசாங்கத்தை தகர்க்கவும் தொழிலாள வர்க்கத்தை முதலாளித்துவத்திடம் இருந்தும் சுயாதீனப் படுத்தவும புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நடாத்திய போராட்டம் எத்துணை தூரம் முக்கியமானது என்பது பிரதமர் சிறிமா பண்டாரநாயகா 1975 நவம்பர் 26ம் திகதி பாராளுமன்றத்தில் கழகத்தை ''பயங்கரவாத அமைப்பென'' குற்றம் சாட்டியதில் இருந்து புலனாகி உள்ளது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை அடக்கி விட வேண்டும் என்றே நடத்தப்பட்ட அக்குற்றச் சாட்டினை தகர்த்து விடவும் கழகத்தை பேணவும் தொழிற் சங்கங்களை தலையிடச் செய்யும் முக்கிய பிரச்சாரம் ஒன்றை தொடுப்பதில் கழக தலைமை வெற்றிக் கண்டது

1976 டிசம்பரிலும் 1977 ஜனவரியிலும் கூட்டரசாங்கத்திற்கு எதிரான பொது வேலை நிறுத்தம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கூட்டரசாங்கத்தை தகர்க்க நடத்திய பிரச்சாரத்தின் புறநிலைமையை ஸ்திரப்படுத்தியதுடன் வேலை நிறுத்தம் கூட்டரசாங்கத்துடன் மோதியதால் கழகத்தின் நடவடிக்கைகளை மீண்டும் அரைகுறை சட்ட விரோத நிலைமைக்குள் நடத்த நேர்ந்தது.

1977 ல் யூ. என். பி. அரசாங்கம் ஆட்சியேறியதும் தொழிலாள வர்க்கத்தையும் தமிழ் விடுதலைப் போராட்டத்தையும் ஒடுக்கி எதிர்ப்புரட்சிகர நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொருட்டு அரசியல் எதிராளர்களையும் தமிழ் இனத்தையும் சங்காரம் ஆரம்பித்தது. மீண்டும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வர்க்க எதிரியின் இறுதி இலக்காகியது. 1979 ஜூலை 17ம் திகதி பு. க. கழக இராஜாங்கனை அமைப்பாளரான தோழர். ஆர். பீ. பியதாச பிராந்திய யூ. என் பி. தலைமைகளதும் பொலிசாரதும் அனுசரணையுடன் கொலையுண்டமை கழகத்தினை எதிர் கொண்ட வர்க்க நிலைமையை புலப்படுத்தி காட்டியது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பத்திரிகைகளின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் வெளியீட்டாளரான தோழர். ஆனந்த வக்கும்புறவை 1983ல் தமிழ் இன சங்காரத்திற்கு சில தினங்களின் முன் கைது செய்ய பொலிசார் முயற்சித்ததுடன் 1984 ல் அவர் கைது செய்யப்பட்டு 3 வாரங்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டார் 1984 செப்டம்பர் மாதம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மத்திய குழு உறுப்பினர் தேவராஜாவும் அங்கத்தவர் வில்லியமும் தோட்ட புறத்தில் பொலிசாரால் கைது செய்யப்பட்டு 18 தினங்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அனைத்துலக குழுவிற்காக நடத்திய போராட்டம் இந்த எதிர்ப்புரட்சியின் கொடிய முயற்சிகளுக்கு உளரீதியிலும் உடல் ரீதியிலும் எதிர் கொண்ட தொழிலாள வர்க்கத்தின் அனைத்துலகவாதத்தின் மீது நிறுவப்பட்டு செய்த போராட்டம் ஆகும். தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஓடுகாலிகள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தனதும் விசேடமாக அவர்களது இலக்காக விளங்கிய கழகத்தின் பிரதம செயலாளர் தோழர் கீர்த்தி பாலசூரியவை அரசியல் ரீதியிலும் அமைப்பு ரீதியிலும் அடக்கி விட நடத்திய செயற்றிட்டமானது எகாப்புரட்சியின் மேற்கூறிய தேவைகளுடன் மிக நன்கு பொருந்தி இருந்தது. அவரது கட்டுரையை கீழ்ப்படுத்தியமை, அவருக்கு எதிராக ஆத்திர மூட்டலை தூண்டியமை, அவரது சௌக்கிய பாதுகாப்பு பற்றி அலட்சியப்படுத்தியமை போன்றவை ஓடுகாலிகளால் செய்யப்பட்ட துஷ்ட தலையீடாகும் தோழர். கீர்த்தி பாலசூரியவின் சௌக்கிய நிலைமை சீர்குலையவும் மரணம் சீக்கிரமாகவும் இவை காரணமாயமைந்ததாக நாம் குற்றம் சாட்டுகின்றோம்

1985 அக்டோபரில் இருந்து 1986 பெப்ரவரி வரையிலான காலகட்டத்துள் பழைய தொழிலாள புரட்சிக் கட்சி தலைமைத்துவத்துடனான பிளவு பூரணப்படுத்தப்பட்ட பின் தோழர். கீர்த்தி பாலசூரிய உட்பட்ட அனைத்துலகக் குழுவின் பெரும்பான்மை தலைமைகள் ட்ரொட்ஸ்கிசத்திற்கான போராட்டத்திற் புதிய திருப்பத்தை ஏற்படுத்தினர்.

விட்டோடிகளான ஓடுகாலி ஏஜந்துகளது காட்டிக் கொடுத்தல்களின் அடித்தளங்களில் இருந்து தேசியவாத சந்தர்ப்பவாதத்தை துடைத்து எறிய நடத்திய அப்போராட்டத்தில் அனைத்துலகக் குழுவினால் ட்ரொட்ஸ்கிச செயற்திட்டத்தின் அடித்தளம் மீண்டும் நிலைநாட்டப்பட்டது. இப்பிளவு ஆழமாகும் ஏகாதிபத்திய நெருக்கடி பற்றிய முன் குறிப்பும், தத்துவ ரீதியான ஆயத்தத்திற்கு முன்னோடியாகியது.

புரட்சிகர போராட்டங்களுக்கு எழும் பாட்டாளி வர்க்கத்தை ஒருங்கிணைந்த உலக முன்னோக்கு தயாரிப்பதற்கு அனைத்துலகக் குழு நடவடிக்கை எடுத்து வந்த சூழ்நிலையிலேயே தோழர். கீர்த்தி பாலசூரிய காலமானார்.

ஓடுகாலிகளை விரட்டிய பின் அனைத்துலகக் குழு தலைமைத்துவம் உலக பாட்டாளி வர்க்க தலைமைத்துவத்தை கட்டி எழுப்ப ஏற்படுத்திய தூய முன்னோக்குடனான ஐக்கியத்தை தோழர். கீர்த்தி பாலசூரிய பெருமிதத்துடனும் சந்துஷ்டியுடனும் விளங்கினார்.

எதிர்ப்புரட்சிக்கு திட்டமிடும் ஆளும் வர்க்கத்திற்கு எதிராக தொழிலாள வர்க்கத்தை அணி திரட்ட போராடும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் அதன் தலைமைத்துவமும் அரசாங்கத்தினதும் அரச இயந்திரத்தினதும் இலக்காகிய சூழ்நிலையுள் கழகத்தினையும் அதன் தலைமையினையும் பேண அனைத்துலகக் குழு தலைமை நடத்திய பலத்த தலையீடானது அவ்வனைத்துலகவாத ஒருங்கிணைப்பினால் வெளிப்பாடாகியது.

1986 ஜூன் மாதத்தில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தற்போதைய பொதுச் செயலாளரும் அச்சமயத்தில் மத்திய குழு உறுப்பினராயும் விளங்கிய விஜே டயஸ், மத்திய குழு உறுப்பினர் புரூடன் பெரேரா, அங்கத்தவர் ரூமன் பெரேரா, விரான் பீரிஸ் என்ற தோழர்களை சிலாபம் பொலிசார் கைது செய்து கழகத்திற்கு எதிராக ''பயங்கரவாத'' முத்திரை குத்தி அரச அடக்கு முறையை கட்டவிழ்க்க அரசாங்கம் முயற்சித்தது அம்முயற்சியை தோற்கடிக்க நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு அதன் கிளைகள் காணப்படும் நாடுகளின் தொழிலாள வர்க்க இயக்கத்தை பரந்த அளவில் அணிதிரட்டி நிகழ்த்திய தலையீட்டின் பலத்தினால் விளைந்த நடைமுறை நிலைமையின் முக்கியத்துவத்தை தோழர். கீர்த்தி பாலசூரிய மேன் மேலும் சுட்டிக் காட்டினார்.

அனைத்துலகக் குழுவின் இந்த அனைத்துலக ரீதியான பிரச்சாரம் அனைத்துலகவாத கோட்பாட்டை தொழிலாள வர்க்கத்துள் நிறுவச் செய்த போராட்டமாகும். அனைத்துலக ஏகாதிபத்தியத்தினதும் அதன் ஏஜந்துகளதும் எதிர் தாக்குதலுக்கு எதிராக கிளர்ந்து எழுவதன் ஊடாக மட்டும் தொழிலாள வர்க்கத்திற்கு சுய ரீதியான ஒருங்கிணைப்பினை மிக நன்கு கட்டி எழுப்ப முடியும். அது தொழிலாள வர்க்கத்தை ஆளும் வர்க்கமாக மாற்றுவதற்காக பரீட்சிக்கும் மிக உயர்ந்த உத்தியாகும்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை அடக்கி விடுவதற்கு எதிராக தலையிட்டமை தொழிலாளர் தத்தம் நாடுகளில் தாம் எதிர்நோக்கும் ''நெருங்கிய பிரச்சினைக்கான'' தலையீடு ஒன்றல்ல. சந்தர்ப்பவாத தலைமைகள் தொழிலாள வர்க்கத்தை அனைத்துலக ரீதியில் ஒருங்கிணைப்பதற்கு எதிராக உள்ளனர். அனைத்துலகக் குழுவின் கிளைகள் தத்தம் நாட்டு தொழிற் சங்கங்கள் தொழிலாள வர்க்க கட்சி ஒடுக்கப்பட்ட மக்களின் அமைப்புக்களினூடாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை பேணும் பிரச்சாரத்தை நடத்தியதுடன் யூ. என் பி. அரசாங்கத்தினதும் இனவாத சிங்கள முதலாளித்துவத்தினதும் சுபாவத்தையும் தமிழ் விடுதலைப் போராட்டத்தையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக புரட்சிகர கொள்கையையும் தொழிலாளருக்கு அறிமுகம் செய்து வைத்தன.

இப்பிரச்சாரம் மறுபுறத்தில் இலங்கையின் அரச அடக்கு முறை இயந்திரத்திற்கு அரசாங்கத்திற்கும் தொடுத்த பலத்த தாக்குதல் ஒன்றாகும்.

பிளவின் ஆரம்பத்தில் இருந்து தோழர் கீர்த்தியின் இறப்பு வரையிலான 2 வருடம் 2 மாதங்கள் கொண்ட காலகட்டத்துள் அத்தோழரின் முக்கிய ஒத்துழைப்புடன் அனைத்துலகக் குழுவினால் நடத்தப்பட்ட கோட்பாட்டு நடவடிக்கை பாரியதாகும். அனைத்துலகக் குழுவின் முழு வரலாற்றினதும் இக்குறுகிய காலத்துள் அதகைய பாரிய கோட்பாட்டு

★ 6 ம் பக்கம் பார்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர். கீர்த்தி பாலசூரியவின் நினைவு . .

[5 ம் பக்கத் தொடர்ச்சி]

பங்களிப்பு கிடைக்கப் பெறவில்லை. ''நான்காம் அகிலத்தின்'' தத்துவார்தத சஞ்சிகை ஐந்து வெளிபிடப்பட்டதுடன் ட்ரொட்ஸ்கிச கோட்பாடு, செயற்திட்டத்தின் அடித்தளத்தை ஆராய்ந்து அனைத்துலக தொழிலாள வர்க்கத்திற்கு வெளியிட்ட கட்டுரைகள் பல தொகுதிகளாகும். தோழர். கீர்த்தி பாலசூரிய அனைத்துலகக் குழுவின் செயலாளர் பீற்றர் சுவாட்ஸ், அமெரிக்க வேர்க்கஸ் லீக்கின் டேவிட் நோர்த் ஜெர்மனியில் பூண்ட் ஆபயிட்டர் சோசலிஸ்டின் வூலிரிபர்ட், அவுஸ்திரேலிய சோசலிச லேபர் லீக்கின் நிக் பீம்ஸ், பிரித்தானியாவின் அனைத்துலக கம்யூனிஸ்ட் கட்சியின் டேவ் ஹயிலண்ட் என்ற அனைத்துலகக் குழுவின் தலைமை தோழர்கள் இக்கோட்பாட்டு போராட்டத்தில் மிக முக்கிய கைங்கரியத்தை நிறைவேற்றினர். இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னைய முக்கிய ட்ரொட்ஸ்கிச தலைவரான அவரது சமரசமற்ற போராட்டத்தின் படிப்பினைகளும் ட்ரொட்ஸ்கிச இயக்கம் பற்றிய பாரிய அறிவும் மேற்குறிப்பிட்ட கோட்பாட்டு பொறுப்புக்கு மிக இன்றியமையாததாக அமைந்தது. இப்போராட்டத்தின் ஊடாக அனைத்துலகக் குழுவின் இலங்கை கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் புதிய பொறுப்புக்காக அவரால் உயர்த்தப்பட்டது. அண்மையில் அவரால் வெளியிடப்பட்ட ''ஹீலி — பண்டா — சுலோற்றரின் துரோகம்'' ''மைக்கல் பண்டா முதலாளித்துவ தேசியவாதத்தின் பரிந்துரையாளர் என்ற கட்டுரைகள் உலக யுத்த கால தீர்வுக்குப் பின் ஏற்பட்ட ''தேசிய அரசு'' களின் சுபாவத்தை பற்றிய உண்மையான மார்க்சிய ஆய்வுகளாகும். அங்ஙனமே அவரது ஒத்துழைப்புடன் நான்காம அகிலத்தின் அனைத்துலகக் குழு 1986 அக்டோபர் 10 ம் திகதி வெளியிட்ட ''புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முன்நோக்கும் பணிகளும்'' 1987 நவம்பர் 19 ம் திகதி வெளியிட்ட ''இந்திய — இலங்கை ஒப்பந்தமும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும்'' என்ற பிரசுரங்கள் அனைத்துலகக் குழு ஓடுகாலிகளுக்கு எதிராக நடத்திய போராட்டத்துள் தீவிரம் அடைந்த தொழிலாள வர்க்க புரட்சிகர தலைமைத்துவ பங்களிப்பு போராட்டத்தை எடுத்துக் காட்டியதுடன் அம் முன்னோக்கினை அரசியல் அபிவிருத்திக்குள் முனைப்பாக உறுதிப்படுத்துதலையும் பெற்றது. இவ்விடத்தில் அனைத்துலகக் குழு, ஒரு பார்வையாளராக இருக்காமல் முதலாளித்துவத்தினதும் அதன் சகல ஏஜந்துகளதும் அழுத்தங்களை தலை வெட்டிச் சாய்த்து தொழிலாள வர்க்கத்திற்கு புரட்சிகர பாதையை காட்டும் அமைப்பாக எழுச்சியுற்றது.

பாரிய சிங்கள இனவாத வெறிக்கு மத்தியில் 1986 நவம்பர் 10 ம் திகதி அனைத்துலகக் குழு வெளியிட்ட அறிக்கையில் தமிழ் தேசியத்தின் தேசிய சுயநிர்ணய போராட்டம் இந்திய உபகண்டத்தில் முதலாளித்துவ அரசினை நெருக்கடிக்கு இட்டு சென்று உள்ள விதத்தை தெளிவாக்கியதுடன் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தின் சாத்தியப்பாட்டை பேணியவாறு அப்போராட்டத்தின் தலைமையான தமிழ் ஈழ விடுதலைப் புலி அமைப்பின் அரசியல் வங்குரோத்தினை பற்றி எச்சரிக்கை விடுத்துள்ளது. அதே சமயம் பாட்டாளி வர்க்க தலைமைத்துவத்தை வழங்கும் செயற்திட்டத்தையும் எடுத்துக் காட்டியது.

1987 ஜூன் மாதம் இலங்கை ன் முதலாளித்துவ வர்க்கத்தை தோல்விக் காட்டடுத்தும் மிரட்டல் எழும் போது இந்திய முதலாளித்துவத்தின் பிற்போக்கு தயாரிப்பினை முன்கூட்டியே அம்பலப்படுத்தி விட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முன்நின்றது.

''வடக்கில் தமிழ் தேசியத்திற்கு எதிராக யூ. என். பி. அரசாங்கம் உக்கிரப்படுத்தியுள்ள இராணுவ அடக்கு முறை''யும் இந்தியாவினதும் இலங்கையினதும் முதலாளித்துவ வர்க்க தேசிய வெறியை கிளப்பும் யுத்த பறையடிப்பும் நேரடியாக எடுத்துக் காட்டுவது தமிழ் தேசியத்தின் தேசிய சுயநிர்ணய உரிமையைப் பேணும் பொருட்டு இலங்கை இந்திய தொழிலாள வர்க்கத்தினை பிற்போக்கு முதலாளித்துவ ஆளும வர்க்கத்தை புரட்டியடிக்கும் பொருட்டு சுயாதீனமாக அணி திரட்ட வேண்டிய தேவையாகும்.

''தமிழ் ஈழ விடுதலைப் புலி அமைப்பினுல் அணி திரட்டபட்ட தமிழ் தேசியத்தின் ஆயுத போராட்ட இயக்கம் நேரடியாக எதிர் கொள்வது இலங்கையின் முதலாளித்துவ ஆளும வர்க்கத்திற்கு எதிராக மட்டுமல்ல இந்திய முதலாளித்துவ ஆட்சியாளரின் குழிபறிப்புக்களுக்கும் இந்திய — இலங்கை முதலாளிகள் வேண்டுமென்றே ஏற்படுத்தும் ஏகாதிபத்திய பாய்ச்சலுக்கு எதிராகவுமாம்.

அந்நாட்களில் தமிழ் நாட்டிலும் இந்தியாவிலும் முதலாளிகள் இந்த பேரினவாத பிரச்சாரத்தை தூண்டிய படி இராணுவ தாக்குதலுக்கு தயாராகும் வேளையில் அனைத்துலகக் குழுவுடன் நட்புறவு கொண்ட இந்திய சோசலிஸ்ட் லேபர் லீக் அந்த ஒடுக்குதலுக்கு எதிராக இங்ஙனம் எழுதியது:

''தமிழ் ஈழ தேசிய இனத்திற்கும், தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களுக்கும் அவைகளுக்குச் சரியென தோன்றும எந்தப் பகுதியில் இருந்தும், எந்த வடிவத்திலும் அவற்றிற்கு வேண்டிய உதவியை பெற உள்ள உரிமையை சோசலிச தொழிலாளர் கழகம் பேணிக் காக்கின்றது இந்திய மத்திய அரசோ அல்லது மாநில அரசுகளோ தமிழ் ஈழ மக்களுக்கோ அல்லது தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களுக்கோ எந்த ஒரு உதவியையும் அளிக்க வசதி செய்யுமாறு சோசலிச தொழிலாளர் கழகம் இந்திய தொழிலாள வர்க்கத்தை பார்த்து அறை கூவுகின்றது ஆனல் அதே நேரத்தில் இந்திய முதலாளித்துவ வர்க்கம் இந்த உதவியை அளிப்பதற்குப் பின்னல் இருக்கும் அதன் உண்மையான நோக்கத்தைப் பற்றி விழிப்புணர்ச்சி உடனும், எந்தவித மயக்கத்துடனும் இருந்து விட வேண்டாம் என்று எச்சரிக்கின்றது.

''அவர்கள் தமிழ் ஈழ மக்களுக்கு உதவி வழங்க எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் ஆனல் அதே நேரத்தில் அவர்கள் தமிழ் ஈழ மக்களுக்கு உதவி அளித்தல் என்ற மூடு திரையின் கீழ் இந்திய தொழிலாள வர்க்கத்திற்கும் விவசாயிகளுக்கும் மற்றும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கும் எதிராக இந்திய முதலாளித்துவ அரசை பலப்படுத்துவதற்காக நடத்தப்படும் இந்திய பேரினவாத கூச்சலும் இராணுவ பலம் பற்றிய முழக்கங்களையும் எதிர்த்து எவ்வித சமசரமும் இன்றி விடாப்பிடியாக போராட வேண்டும்.''

(சோசலிச தொழிலாவர் கழகத்தின் அறிக்கை — 1987 ஜூலை 21 — 'புலட்டின்' பத்திரிகை)

1987 நவம்பர் 19 ம் திகதி நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் பிற்போக்கு தன்மையை அம்பலப்படுத்தி இலங்கை ஈழம் அரசுக்கும் இந்திய உபகண்ட தொழிலாள வர்க்க அனைத்துலகவாத ஒருங்கிணைப்பிற்கும் பின்வரும் முன்நோக்கினை சமர்ப்பித்தது.

''வரலாறு, ஸ்டாலினிஸ்டுகள், திரிபுவாதிகள் குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளின் எதிர்ப்புக்களுக்கு இடையேயும் இப்பணியை பாட்டாளி வர்க்கத்திடம் கையளித்துள்ளது. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை யதார்த்தமாக்கக் கூடிய ஒரே சமூக சக்தி இதுவே. எனினும் இது இதனை தேசிய முதலாளி வர்க்கத்தின் ஒரு பின்னிணைப்பாக அன்றி அதன் மூர்க்கமான எதிரி என்ற முறையிலேயே செய்கின்றது. தனது சொந்த ஆயுதங்களுடனும் தனது சொந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையிலும் கிராமங்களிலும், நாட்டுப்புறங்களிலும் உள்ள சகல ஒடுக்கப்படும் வெகுஜனங்களை தன்பின் அணி திரட்டிக் கொண்டு போராடுகின்றது. சகல ஒடுக்கப்படும் மக்களதும் நியாய பூர்வமான ஜனநாயக உரிமைகளை தனது சர்வாதிகாரத்தை நிலைநாட்டும் பாட்டாளி வர்க்கதின் தலைமையிலான சோசலிசப் புரட்சியின் ஒரு உப — உற்பத்தி பொருளாகவே சுயநிர்ணயம் ஈட்டப்படுகின்றது. தேசிய இனங்களின் நிசமான சமத்துவத்துக்கான திட்டமாக இது சுய விருப்பில் அடிப்படையில் ஒரு ஐக்கிய சோசலிச ஒன்றியத்தின் சிருஷ்டியை பிரேரிக்கின்றது. சகல ஒடுக்கப்படும் தேசிய இனங்களையும் சுய விருப்பில் இணைய வைப்பதானது பொருளாதார, கலாச்சார முன்னேற்றத்துக்குச் சிறந்த வாய்ப்பினை அளிக்கும் என்ற நம்பிக்கையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமானது பிரிந்து செல்ல விரும்பும் தேசிய இனங்கள் அங்ஙனம் செய்யும் உரிமையைக் கொண்டிருக்கவும் உத்தரவாதம் அளிக்கின்றது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினுல முன்வைக்கப்பட்டு உள்ள தமிழ் ஈழம், சிறீலங்காவின் ஐக்கிய சோசலிஸ்ட் அரசுகளின் வேலைத்திட்டத்தின் அத்தியவசியமான உள்ளடக்கம் இதுவே தான்''

இந்திய உபகண்டத்துள் தோழர். கீர்த்தி பாலசூரிய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்திற்கும் சோசலிச தொழிலாளர் கழகத்திற்கும் தலைமை தாங்கியவாறு நடத்திய திடமான போராட்டம் அனைத்துலகக் குழுவின் ஈடில்லாத போராட்டத்தின் பாகமாகும். அவர் தேசியவாத போக்கு பற்றிய செயற்திட்டத்தை கிழித்து எறிந்து சகல திரிபுவாதிகளுக்கும் எதிராக அனைத்துலகவாத முன்நோக்கின் மீது செயற்றிட்டத்தை சாதிக்க போராடினர்.

மிகவும் கஷ்டமான நிலையில் சுய போராட்டத்தினை சளையாது எடுத்த தோழர். கீர்த்தி பாலசூரிய கட்சிக்கு வெளியேயான சந்தர்ப்பவாதம் தொடர்பான ஈவிரக்கம் காட்டாதது போல கட்சிக்குள் அதன் சாயை காணும் நேரம் அதனை துடைத்து கட்டும் வரை இடையருது உழைத்தார். அவர் அனைத்துலகக் குழுவிலும் தம் கிளையிலும் கூர்ந்த அககரை கொண்டவர். மார்க்சிய இயக்கத்தின் சகல நூல்களையும் பரிசீலனை செய்த அவர் தத்துவம், வரலாற்றை போல, வர்க்க எதிரியின் நூல்களையும் உலக வர்க்க போராட்டத்தையும் மிக நுணுகி ஆராய்ந்து விஞ்ஞான பூர்வ தலைமைத்துவத்தை வழங்கவல்ல உயர்மட்ட கோட்பாட்டினை அபிவிருத்தி செய்ய அறிவை திரட்டினர். அவர் தொழிலாளர் ஒடுக்கப்பட்டோரை எந்நேரமும் மனங்

★ 8 ம் பக்கம் பார்க்கவும்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்

பெயர் :——————————————

முகவரி :——————————————

கழகத்தைப் பற்றி எனக்கு மேலும் விபரங்கள் வேண்டும் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்,

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்

இல. 90, 1 – வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கம்யூனிஸ்ட் கட்சி விஜயானந்தன் கொலையின் பின்னணியில்

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் எஸ். விஜயானந்தன் படுகொலை செய்யப்பட்டமையை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கண்டனம் செய்கின்றது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட பிரசுரத்தில் விஜயானந்தன் இந்திய இராணுவத்தின் உளவாளியாகச் செயற்பட்டதால் அவரை கொலை செய்ததாக குறிப்பிட்டது. சென்னையில் விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட அறிக்கை தமக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை எனக் குறிப்பிட்டது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம், இந்திய — இலங்கை ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக நடாத்தி வரும் பாதுகாப்பு யுத்தத்தினை நியாயப்படுத்தும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அந்த ஆக்கிரமிப்புப் படைகள் தொடர்பாக தோற்கடிப்புவாத நிலைப்பாட்டை கொண்டுள்ளது.

எவ்வாறெனினும் எதிர் அரசியல் இயக்கங்களின் அங்கத்தினர்களைப் படுகொலை செய்யும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கையாலாகாத்தனமான வங்குரோத்து விதிமுறைகளை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வன்மையாக எதிர்க்கின்றது. தமிழ் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகச் செயற்படுவோரை அரசியல் ரீதியில் அம்பலப்படுத்தி, தோற்கடிக்க இவ்வியக்கம் இலாயக்கற்று உள்ளதையே இப்படுகொலைகள் காட்டுகின்றன.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள், காந்தி — ஜயவர்தன அரசாங்கங்களின் இந்திய — இலங்கை உடன்படிக்கையையும், இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பையும் ஆதரித்ததன் மூலம், அவர்கள் தமிழ் விடுதலைப் போராளிகளதும் வெகுஜனங்களதும் இரத்த வெள்ளத்தில் நீச்சலடித்த பேர்வழிகள் இவர்கள் காந்தி — ஜயவர்தன அரசாங்கங்களை தமிழ் தேசிய இனத்துக்கு 'ஜனநாயக உரிமைகளை வழங்கி' 'சமாதானத்தை' சிருஷ்டிப் போராக காட்டி வந்துள்ளது. இந்த எதிர்ப்புரட்சி வாயடிப்புக்கள் மூலம் தொழிலாள வர்க்கத்தின் கண்களில் மண்ணை வீசி, தமிழ் முதலாளித்துவ தலைவர்களின் முண்டுடன் முதலாளித்துவ ஐக்கிய அரசினை காக்க கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்டாலினிஸ்டுகள் செயற்படுகின்றனர்.

தமிழ் விடுதலைப் போராட்டத்தின் தலைமையை கொண்டிருந்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம், இந்திய முதலாளி வர்க்கம் தமக்கு ஆதரவு அளிக்கும் என்ற பொறியில் அகப்பட்டு சுயநிர்ணய உரிமைக்காக போராடுவதில் இருந்து பின்வாங்கவும் தயாராகி வருகின்றது. இன்று அவர்கள் தமக்கு 'அதிக அதிகாரங்களை கொண்ட 'தீர்வு' களை நாடும் பேரம் பேசல்களில் ஈடுபட்டுள்ளனர். விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களின் இச்செயற்பாடுகள் அவர்களின் வர்க்கத் தன்மையால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. இத்தலைமை தமிழ் தேசிய முதலாளி வர்க்கத்தின் தீவிரவாதப் பிரிவினைச் சார்ந்தது.

இதனால் இந்திய முதலாளி வர்க்கச் சார்பான எதிரிகளையும் சரி தொழிலாள வர்க்க கட்சிகளின் துரோகத் தலைவர்களையும் சரி வெளி வெளியாக அரசியல் ரீதியில் கண்டனம் செய்து; உறுதியான ஜனநாயக வேலைத்திட்டத்தினை முன்வைக்க விடுதலைப் புலிகளால் முடியாதுள்ளது. அதன் தேசிய சிறப்புரிமைவாத அரசியலானது முதலாளித்துவ நிர்வாகச் சிறப்புரிமைகள் சிலவற்றைப் பெற்றுக் கொள்ளும அளவுக்கு நாற்றம் எடுத்துள்ளது.

விஜயானந்தனின் கொலையை கண்டிக்கும் அதே வேளையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் விஜயானந்தன் உள்ளடங்கலான ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளையும், தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தினையும் காட்டிக் கொடுக்க நடாத்தி வரும் இரத்தம் தோய்ந்த வழி முறைகளை வன்மையாகக் கண்டனம் செய்கின்றது அதன் எதிர்ப்புரட்சி தன்மையை அம்பலப்படுத்தி தோற்கடிக்கப் போராடுகின்றது. அவர்கள் தம்பால் படுகொலையை அழைக்கும் வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்திக் கொண்டுள்ளவர்களாவர். போர்த்துக்கீச ஒல்லாந்த, ஆங்கிலேய, சிங்கள ஆட்சியாளர்களின் கீழ் பல தசாப்தங்களாக ஒடுக்கப்பட்டு வரும் தமிழ் தேசிய இனம் தமது விடுதலைக்காக நடாத்தி வரும் போராட்டத்தில் ஸ்டாலினிஸ்டுகள் முக்கிய எதிரிகளாக விளங்குகின்றனர். ஆரம்பம் முதலே இவர்கள் 'முதலாளித்துவ ஐக்கிய அரசினை' [illegible]தில் ஈடுபட்டுள்ளனர்.

## வெட்கக்கேடு

இந்த ஸ்டாலினிஸ்டுகள் அதனைப் பேணும் அடிப்படையில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் நடாத்தி வரும் வெட்கக் கேடான இரத்தம் தோய்ந்த ஒடுக்கு முறையைப் பேணுவதன் மூலம் தமிழ் விடுதலைப் போராளிகளுக்கு எதிராக மட்டுமன்றி, இந்திய இராணுவம் செய்யும் அழிவுகளை எதிர்க்கும் எந்தவொரு நபருக்கும் எதிராகவும் தாக்குதல் நடாத்துகின்றனர். தமிழ் பொது மக்கள் யுத்தத்தில் கொல்லப்படுவது தவிர்க்க முடியாதது என்கின்றனர்.

இந்திய — இலங்கை உடன்படிக்கைக்கும், ஆக்கிரமிப்புக்கும் இவ்விரு நாட்டினதும் தொழிலாள வர்க்கத்தினை பலியிடும் பொருட்டு இந்திய — இலங்கை ஸ்டாலினிசக் கட்சிகள் புனிதமான கூட்டினை அமைத்துள்ளனர்.

இந்த ஸ்டாலினிஸ்டுகள் வடக்கு — கிழக்கு மாகாணங்களில் உள்ள இந்திய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்ப்பவர்களை பற்றி உளவு பார்த்தால் அது ஒன்றும் புதினமல்ல. அந்த வேலைகளில் இப்பிராந்தியத்தில் அவர்களுக்கு வரலாற்று 'ரெக்கோட்' உண்டு. இரண்டாம் உலக யுத்தத்தின் போது பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிராக காங்கிரஸ் முதலாளிகள் நடாத்திய 'வெள்ளையனே வெளியேறு' எதிர்ப்பியக்கத்தினை உடைக்க இந்திய ஸ்டாலினிச கட்சி தொழிற்பட்டது அதன் பேரில் அவர்கள் காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு உளவு பார்த்து தகவல் சேகரித்து வழங்கி வந்தார்கள். இதற்கான நிச சாட்சிகள் உண்டு வரலாற்று அறிக்கைகளே உண்டு.

இதன் மூலம் இந்த ஸ்டாலினிஸ்டுகள் இந்திய கிராமிய விவசாயிகள் மீது மட்டும் அன்றி, தொழிலாள வர்க்கத்தின் மீதும் கூட காங்கிரசின் அரசியல் பிடியை இறுக வைப்பதற்கான நிலைமையை சிருஷ்டித்தனர்: இலங்கையில் காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிராக சுதந்திரப் போராட்டத்தில் தொழிலாள வர்க்கத்தினை வழி நடாத்திய அன்றைய சமசமாஜக் கட்சி தலைவர்களுக்கு எதிராக கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு உளவு பார்த்தவர். இந்த எதிர்ப்புரட்சியாளர்கள் மொஸ்கோ ஸ்டாலினிஸ்டுகளதும், உள்ளூர் முதலாளித்துவ அரசின் நலன்களின் பேரிலும் செயற்படுகின்றனர்.

இலங்கையில் ஸ்டாலினிஸ்டுகள் ஆரம்பம் முதலில் நடாத்தி வந்த காட்டிக் கொடுப்புக்களோடு 1964 ல சமசமாஜக் கட்சியினர் இணைந்து கொண்டனர். சமசமாஜக் கட்சி தலைவர்கள் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைவர்களுடன் சேர்ந்து இழைத்த காட்டிக் கொடுப்புக்களின் பெறுபேறாக தமிழ் மக்கள் தமது விடுதலையின் பேரில் தமது சொந்தப் பாதையில் இறங்கினர். இக்காட்டிக் கொடுப்பின் பெறுபேறாகவே குட்டி முதலாளித்துவ தேசிய புரட்சிகர தமிழீழ விடுதலைப் புலிகள இயக்கம் தோன்றியது.

## பிளவு

தமிழ் தேசிய இனத்தினை இனவாத ரீதியில் ஒடுக்கும் சிங்கள முதலாளித்துவ வர்க்கத்துடன் இத்தலைமைகள் கைகோர்த்துக் கொண்டதால் தொழிலாள வர்க்கத்தில் இருந்து தமிழ் ஒடுக்கப்படும் மக்கள பிளவுண்டு பேயினர் பின்னர் சிங்கள இனவாத இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கும, இன்று இந்திய இராணுவ ஆக்கிமிப்புக்கும் இவர்கள் ஒத்துழைப்பு வழங்கியதால் இப்பிளவு இரத்த களரியினால உணர்த்தப்பட்டுள்ளது. இந்த விதத்தில் சிங்கள — தமிழ் மக்களை ஐக்கியப்படுத்த நாம் முயல்கின்றோம் என்ற இத்தலைமைகளின் மோசடிகள் சிதறடிக்கப்பட்டுள்ளன. இத்தலைமைகள் தமது காட்டிக் கொடுப்புக்கள் மூலம் தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் முன்னிலையில் தொழிலாள வர்க்கத்தை அவமானத்துக்குள்ளாக்கியுள்ளனர்.

மேலும் இந்தக் காட்டிக் கொடுப்பை மூடி மறைக்கும் பொருட்டு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் 'தேசியவாதத்தை' தென் இலங்கை இனவாத மக்கள் விடுதலை முன்னணி (ஜே வீ. பீ.) யின் இனவாதத்துடன் சமப்படுத்தும் கடைகெட்ட முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம், மக்கள் விடுதலை முன்னணிகளுக்குள் 'பாசிசம்' தோன்றுவதாகவும், முக்கிய சவால் அதுவே எனவும் ஸ்டாலினிச பாராளுமன்ற உறுப்பினர் டியூ குணசேகர குறிப்பிட்டார். இதன் அர்த்தம் என்ன?

இந்த இரண்டு இயக்கங்களையும் தவிடு பொடி ஆக்க தாம் முதலாளித்துவ யூ. என். பி. அரசாங்கத்துடன் இணைந்து நிற்பதை அவர் சுட்டிக் காட்டினார். தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக எதிர்ப்புரட்சியில் ஈடுபட்டுள்ள யூ. என் பி. அரசாங்கத்துக்கும் முதலாளித்துவ சிறீலங்கா — மக்கள் விடுதலை முன்னணி கூட்டில் இருந்தும் கவனத்தை வேறு திசையில் திருப்ப இப்பிரச்சாரம் முயல்கின்றது.

இச்சகல ஈழறுபடிகள் மூலம் இத்துரோகத் தலைமைகள் தமிழ் தொழிலாள வர்க்கத்தை தேசிய புரட்சியாளர்களின் பிடிக்குள் தள்ளவும், அத்தொழிலாளர்கள் இலங்கைத் தொழிலாள வர்க்கத்துடன் இணைவதை தடுக்கவும் தொழிற்படுகின்றனர் இத்தலைமைக சிங்கள ஹிந்து பேரின முதலாளி வர்க்கத்தின் தேசிய வெறியின் காப்பாளர்களாக விளங்குகின்றனர். இது தமிழ் தேசிய இனத்தை தொடர்ந்தும் ஒடுக்கப்படும் இனமாக வைத்திருப்பதற்கான முதலாளித்துவ வேலைத்திட்டத்துக்கு தோள் கொடுப்பதாகும்

இத்தலைமைகள் இந்திய — இலங்கை உடன்படிக்கைக்கும், ஆக்கிரமிப்புக்கும் வழங்கும் ஆதரவை உடனடியாக நிறுத்தும் படியும், முதலாளித்துவ சிறீலங்கா மக்கள் கட்சியுடனான கூட்டினை துண்டிக்கும் படியும் தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்துக்காகப் போராடும் படியும் சமசமாஜ — கம்யூனிஸ்ட் தலைமைகளை நெருக்குவதன் மூலம் அவர்களின் துரோக வழி முறையை தோற்கடிக்கும் படியும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை கட்டி எழுப்பும் படியும் நாம் சகல போராளிகளையும் வேண்டுகின்றோம்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அரசியல் வங்குரோத்தானது, தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்துக்கான பாதையை சிறீலங்கா — தமிழ் ஈழ தொழிலாள வர்க்கத்தினால் மட்டுமே காட்ட முடியும் என்பதை ஊர்ஜிதம் செய்துள்ளது. தொழிலாள வர்க்கத்தின் மேல் சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ — இ. தொ. கா. தலைமைகளும் அரசாங்க லிகிதர் சேவை — இலங்கை ஆசிரியர் சங்க மத்தியவாதிகளும் கொண்டுள்ள பிடியை உடைத்து தமிழ் தேசிய இனப் பிரச்சினையையும், கிராமப்புற விவசாயிகள் பிரச்சினையையும் தீர்த்து வைக்கும் வரலாற்றுப் பணியில் ஈடுபட வேண்டும்: இப்பணிக்கு தோள் கொடுக்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட கழகத்துடன் இணையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை வழங்கு! அரசியல் கைதிகளை விடுதலை செய்!

தோட்டத் துறையைச் சேர்ந்த 160 இளைஞர்கள் அரசியல் கைதிகளாக கைது செய்யப்பட்டதை எதிர்த்தும் தோட்டத் தொழிலாளரின் குடியுரிமையை தாக்கி அவர்களை பலாத்காரமாக இந்தியாவுக்கு தள்ளுவதை எதிர்த்தும் தோட்டத் தொழிலாளர்கள் நடாத்தும் போராட்டத்துடன் இணைந்து ஆதரிக்குமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள வர்க்கத்தின் சகல பிரிவினரையும் வேண்டுகின்றது.

கடந்த மாதம் சுமார் 3000 தோட்டத் தொழிலாளர்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோர் கைது செய்யப்பட்ட இளைஞர்களை விடுதலை செய்யும் படி கோரி 1 நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். தோட்டப் பகுதியில் மக்களின் பேராதரவைப் பெற்ற இந்த எதிர்ப்பியக்கத்தில் இ. தொ. கா. தொழிலாளர்கள் உட்பட அநேக தொழிற் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

யூ. என். பி. அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ள தொண்டமான் தலைமை இந்த எதிர்ப்பியக்கத்தை வன்மையாகக் கண்டனம் செய்தது. அத்துடன் நின்றுவிடாமல் இந்த எதிர்ப்பு இயக்கத்துக்குத் தலைமை தாங்கிய மாவட்ட இ. தொ. கா. தலைவர் சந்திரசேகரனிடம் விளக்கமும் கோரியது.

மூன்று வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட இந்த இளைஞர்கள் உட்பட்ட சிறைக் கைதிகள் மஹறசின், வெலிக்கடை, பூசா, போகாம்பரை முதலான சிறைகளிலும் பலவேறு பொலிஸ் நிலையங்களிலும் சிறை வைக்கப்பட்டுள்ளனர். கண்டி இரகசியப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட சுமார் 10 இளைஞர்கள் எங்கு வைக்கப்பட்டுள்ளார்கள்? அவர்களின் நிலைமை என்ன? என்பதை எவரும் அறியார்.

இந்த இளைஞர்கள் அந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர். கடந்த காலத்தில் தோட்டங்களில் பல்வேறு வேலை நிறுத்தங்கள், போராட்டங்களை தாக்கும் பொருட்டு அரசாங்கம் இந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பாவித்தது. இளைஞர்களை கைது செய்யும் பொருட்டு தோட்டங்களுள் பொலிசார் பாய்ந்து விழ அரசாங்கம் இடைவிடாது செயற்பட்டு வந்தது. வடக்கு — கிழக்கில் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கும் யுத்தத்துடன் தொழிலாள வர்க்கத்தைப் பிளவு படுத்தவும், தோட்டத் தொழிலாளரை ஒடுக்கவும் யூ. என். பி. அரசாங்கம் தலையிட்டது. தமிழ் விடுதலைப் போராட்டத்துடன் தொடர்பு உள்ளதாகக் கூறி தோட்டப் பகுதிகளில் பயமுறுத்தல் இயக்கங்களை அரசாங்கம் ஆரம்பித்ததற்குக் காரணம் இவே.

இலங்கைத் தொழிலாள வர்க்கத்தை இன ரீதியில் பிரிக்கவும், முதலாளி வர்க்க ஆட்சியை கொண்டு நடாத்தவும் 1948 ல் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை நீக்கி, அரசியல் உரிமையை பிடுங்கிக் கொள்ள இலங்கை ஆளும் வர்க்கம் செயற்பட்டது. 1964ல் சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இத்தாக்குதல் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. ஜயவர்தன — காந்தி கைச்சாத்திட்ட இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் ஒரு முககிய சரத்து: தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்கு துரத்துவதாகும் இந்தியாவுக்கு ஓட்டிக் கலைக்கப்படும் தொழிலாளர்கள் தொழில் அற்ற அனுதைகளாக அழிவினுள் தள்ளப்படுகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களுககு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள இந்த ஒடுக்குமுறையை மேலும் உக்கிரம் ஆக்கும் பொருட்டு யூ. என் பி. அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. ஆழமாகி வரும் பொருளாதார நருக்கடியின் சுமையை தொழிலாளர்கள் மீது திணிப்பதே இதன் இலக்கு.

கைது செய்தல்களை எதிர்த்து தொழிலாளர்கள் இடையே ஏற்பட்டு வரும் எதிர்ப்பினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் பணிகளில் தொண்டமான் தலைமை ஈடுபட்டுள்ளது. தோட்டப் பகுதியில் கிளர்ந்து வரும் இளைஞர்களையும் போராளி தொழிலாளர்களையும் இந்நாட்டின் தொழிலாளர் வர்க்கத்தின் ஏனைய பிரிவினரில் இருந்து பிரித்து தனிமைப் படுத்தும் பணியில் தொண்டமான் சமசமாஜ — சம்யூனிச — நவசமசமாஜ கட்சித் தலைவர்களுடன் கூட்டாக ஈடுபட்டுள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களை தோட்டங்களில் இருந்து வெளியேற்றவும், இந்தியாவுக்கு அனுப்புவதை துரிதப்படுத்தவும் அரச இயந்திரம் முடுக்கி விடப்பட்டுள்ளது. சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தம், சிறிமா — இந்திரா ஒப்பந்தங்கள் மூலம் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இந்தியாவுக்கு பலாத்காரமாக வெளியேற்றப்பட்டனர்.

தொழில்களில் இருந்து விலக்கி தாம் இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவதை அநேக தொழிலாளர்கள் எதிர்த்தனர். இந்நிலையில் 1987 ஜூலை 29 ம் திகதி கைச்சாத்திடப்பட்ட இந்திய — இலங்கை உடன்படிக்கை தோட்டத் தொழிலாளர்களை பலாத்காரமாக இந்தியாவுக்கு அனுப் ம் நிலைமைகளை உள்ளடக்கிக் கொண்டுள்ளது

இதற்கிடையே குடியுரிமைக்காக விண்ணப்பித்த தொழிலாளர்களின் பேரன், பூட்டன்கள் இலங்கையில் பிறந்ததாக அத்தாட்சி படுத்தும் படி கோரப்படுகின்றனர். இதனால் சில தொழிலாளர்களின் பிறப்புச் சாட்சிப் பத்தரங்கள் திட்டமிட்டு இனவாதிகளால் நாசமாக்கப் பட்டுள்ளன.

இ தொ. கா. தலைவர்களின் இந்த தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை தொழிலாளர் வர்க்கம் அடியோடு நிராகரிக்க வேண்டும் இத்துரோகிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான ஆனவாத ஆத்திர மூட்டல்கள் மூலம் தோட்டத் தொழிலாளர்கள இளைஞர்கள் கைது செய்யப்படுவதை நியாயப் படுததுகின்றனர் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை அகற்றுதல், முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு வேண்டிய முறையில் இந்தியாவுக்கு வெளியேற்றுதல், அகதிகளாக்குதல் என்பவற்றை தொண்டமான் — செல்லச்சாமி தலைமை ஏற்றுக் கொண்டுள்ளது

1948 ன் குடியுரிமை மசோதாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து விட்டு பின்னர் அதை ஏற்றுக் கொண்ட சமசமாஜ — ஸ்டாலினிச — கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்கள் 1964 ன் சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு, இன்று இந்திய — இல

★ 2 ம் பக்கம் பார்க்கவும்

## தோழர். கீர்த்தி.

★ 6 ம் பக்கத் தொடர்ச்சி

கொண்டு செவி சாய்த்து அவர்களது ஆழமான தேவைகள் வரலாற்று ரீதியான தேவைகளினால் நிர்ணயிக்கப்பட்டு உள்ள விதத்தை அறிந்தார். அழுகிய முதலாளித்துவத்தை அங்கோ இங்கோ முடிச்சுட் போட்டு காப்பாற்றும் எவரும் அவரது கோபத்திற்கும் இலக்கனதுடன் வெறுப்பிற்கும் ஆளானர்கள். அவர் அனைத்துலகக் குழுவுடனும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக ஏனைய தோழர்களுடனும் தோழமையுடன் இணைந்தவராவர். இப்படையணியின் போராட்டத்தின் மீது உலக கட்சியை கட்டி எழுப்பாமல் சோசலிச புரட்சியை வெற்றி கொள்ள வைக்க முடியது என அவர் உறுதியாக நம்பினர்.

அவரது ஈடற்ற போராட்டம் உலக பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்று பங்கு பற்றி நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்தது ஆகும் அவரது உடலின் ஒவ்வொரு அணுவிலும் வியாபித்து இருந்த அந்நம்பிக்கையின் மீது மனிதகுல நெருக்கடிக்கு மீட்சியாக உள்ள பாட்டாளி வர்க்க தலைமை நெருக்கடியை தீர்க்க அவர் தம்மை முற்றுக அர்ப்பணித்திருந்தார். 1938 ல் நான்காம் அகிலத்தின் ஆரம்ப மகாநாட்டில் போராட்டத்தின் பாரிய தன்மை பற்றி லியொன் ட்ரொட்ஸ்கி செய்த அவதானமும் அதற்கான அர்ப்பணத்தின் வரலாற்று அர்த்தத்தையும் அவர் நன்கு மனங் கொண்டார். அவரது அந்த அவதானத்தை நாம மீண்டும் மீண்டும் உங்கள் முன சமர்ப்பிக்கின்றோம்

'எதிர்காலத்தை நம்பிக்கையுடன் பார்ப்பது நான்காம் அகிலம் மட்டுமே அது சோசலிச பரட்சியின் உலக கட்சியே! இவ்வுலகில் இதனை தவிர்ந்த உயர்ந்த வேலை ஒரு காலத்திலும் கிடையாது. எம் அனைவர் மீதும் பாரிய வரலாற்று பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது.

''எமது கட்சி எம் ஒவ்வொருவரையும் முற்றுகவும் பூரணமாயும் கோருகின்றது. பிலிஸ்தீன்கள் தமது தனித்துவத்தை பூஜ்ஜயத்தில் தேடிக் கொள்ளட்டும். புரட்சிவாதிக்கு தம்மை தேடிக் கொள்வது என்பது முழுமையாக கட்சிக்கு தம்மை அர்ப்பணிப்பதே.

''ஆம் எமது கட்சி எம் சகலரையும் முழுமையாக எடுக்கும் எனினும் திருப்தி அது எம் சகலருக்கும் அதி உயர்ந்த திருப்தியை வழங்கும் அதாவது, தாம் கலந்து கொண்டது மிகச் சிறந்த எதிர்காலத்தை கட்டி எழுப்புவதற்கே என்ற அறிவு, தத்தமது தோளில் மனித குல எதிர்காலத்தின் ஓர் துளியை சுமத்தப்பட்டுள்ளது என்ற அறிவு. தமது வாழ்கையை அனுவசியமாக கழிக்க வில்லை என்றதை பற்றிய நனவாகும்.

தோழர். கீர்த்தி பாலசூரிய கொண்டு நடத்திய அப்போராட்டத்தில் இணையுமாறு உலக பாட்டாளி வர்க்கத்தை நாம் வேண்டுகின்றோம். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவிலும் அதன் இலங்கை கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்திலும் இணையுமாறு சகல பாட்டாளிகளையும் நாம் வேண்டுகின்றோம்.

முற்றும்

## சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

கொழும்பு 10. 1 - வது மாளிக கந்தை ஒழுங்கை இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்த வக்குப்புறவினல் பஹரகம நாகஹவத்தை வீதி 51 ம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org